மாண்புமிகு பேரவைத்தலைவர் : திரு. விநாயகம் அங்கே தங்கி யிருக்கிறார்களா ?

திரு. கே. விநாயகம் : அங்கே சாப்பிட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் பார்க்காம லேயே கேள்வி போட்டால் எப்படி ?

மதுரை மாவட்ட அரசு விதைப் பண்ணைகள்

• 279 வினா—**திரு. எஸ். அக்னிராஜு** : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் அரசாங்க விதைப் பண்ணைகள் எத்தனை உள்ளன ?

(இ) அவைகளின் மூலமாக செய்யப்பட்ட விநியோக அளவு எவ்வளவு ?

(உ) அவைகளின் மொத்த மதிப்பென்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விவர அறிக்கை * ஒன்று மன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். அக்கினிராஜு : பண்ணை விதைகளை பஞ்சாயத்து யூனியன் மூலம் வினியோகம் செய்யப் படுகிறது. ஒவ்வொரு யூனியனும் விவசாயிகளுக்கு போதுமான அளவில் விதைகள் கொடுக்க விதைப்பண்ணைகள் போதவில்லை. ஆகவே, வட்டந் தோறும் விதைப் பண்ணைகளை அமைக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப் பட்ட தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் கொடுக் கலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அரசாங்கப் பண்ணைகள் புஞ்சை தானியங்களான வீரிய கம்பு, வீரிய சோளம் போன்ற விதைகளையும் உற்பத்தி செய்கின்றனவா ? இல்லையென்றால் அந்த விதைகள் ஒரு எக்கருக்கு 40, 50 ரூபாய் என்று விலை இருப்பதால், அரசாங்கப் பண்ணையில் இவற்றை உற்பத்தி செய்ய முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விதைப் பண்ணைகள் நஞ்சை, புஞ்சை இரண்டு விதைகளையும்தான் உற்பத்தி செய்கின்றன. பொதுவாக சில பண்ணைகள் மண் வளம், பாசன வசதி இவை இல்லாமல் இருக்கும் அளவில் ஏற்பாடு செய்துவிட்டு இருப்பதால், நாம் விரும்பும் அளவில் செய்ய முடியவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, இந்த அரசாங்க விதைப் பண்ணைகளை ஏற்படுத்தும்போது, என்னென்ன செயல் முறைகளை அரசு கையாள்கிறது ?

• 502–503-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1970 மார்ச் 9]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஏற்கனவே 60, 62 பண்ணைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய அமைச்சு வந்தபிறகு, 1967-க்குப் பிறகு குடிமியான்மலையில் உள்ள பண்ணையை எடுத்திருக்கிறது. குடிமியான்மலை பண்ணை லாபகரமாகத்தான் நடக்கிறது. நஞ்சை, புஞ்சை பயிர்களுக்கான விதைகள் அங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் பொதுவாக 60, 62 விதைப் பண்ணைகள் தேர்ந்தெடுக்கப்படும் போது, முறையாகச் செய்யப்படவில்லை. தண்ணீர் கிடைக்குமா, எவ்வளவு காலம் கிடைக்கும், சரியாக இருக்குமா, மண் வளம் சரியாக இருக்கிறதா என்றெல்லாம் பரிசீலனை செய்யாததால், பல இடங்களில் கிணறு தோண்டினாலும், தண்ணீர் போதுமான அளவில் கிடைக்காத நிலை இருக்கிறது. மண் வளமாக இல்லை. இப்படிப்பட்ட குறைபாடுகளால் 60, 62 விதைப்பண்ணைகள் போதுமான விதைகளை உற்பத்தி செய்ய முடியவில்லை. அந்த நிலையில் இருக்கிறோம்.

திரு. ஏ ஆர். சுப்பையா முதலியார்: சார், கேள்வி மதுரை டிஸ்ட்ரிக்ட் பற்றி இருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கும் பேப்பரில், கோவில்பட்டி பற்றி இருக்கிறது. மதுரையில் கோவில்பட்டி இருப்பதாகத் தெரியவில்லை. மொத்தத்தில் மாநில ரீதியில் ஸீட் பார்ம்ஸ் எவ்வளவு இருக்கின்றன என்று சொல்ல வேண்டும் அல்லது அந்த டிஸ்ட்ரிக்ட் பற்றிச் சொல்லவேண்டும். இல்லையென்றால் பிரயோசனம் இல்லை. ஏதோ கேட்கிறோம், ஏதோ இருக்கிறது. ஆகவே, இந்தத் தவறுகளைத் திருத்தி, மொத்தத்தில் மாநிலத்தில் எவ்வளவு ஸீட் பார்மஸ் இருக்கின்றன, உற்பத்தி என்ன, எல்லோரும் காணும் அளவில் இருக்கிறதா என்று பதில் சொல்ல முடியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும். அப்பொழுது மொத்த மாநிலத்திற்கும் விவரங்கள் கொடுக்கப்படும்.

திரு. ஆர். கருப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசாங்கத்திலே நல்ல தரமான விதைகள் கிடைப்பதில்லையென்று சொல்லப்படுகிறது. நெல்லை அறுத்தவுடனே, ஈரமாக இருக்கும்போது காயவைக்காமல், விதைக்கென்று நெல்லை கொள்முதல் செய்து விடுகிறார்கள். ஐ.ஆர். 8 போன்ற நல்ல ரக வித்துக்களை காயவைக்காமல் வாங்கிக்கொள்கிறார்கள். பிறகு அதை ஸ்டாக் செய்த பின்னர், மீண்டும் விவசாயிகளுக்குக் கொடுக்கும்போது அதில் 50 சதவீத நெல் முளைப்பதில்லை ஆகவே, அரசு கொள்முதல் செய்யும்போதே, தரமான நல்ல விதைகளை வாங்கி. விவசாயிகளுக்குக் கொடுக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, அப்படித் தரக் குறைவான விதைகளை எடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் 'ஸ்டேட் ஸீட் சர்ட்டிபிகேஷன் கமிட்டி' என்ற ஒரு குழுவினை அரசாங்கம் சமீபத்தில் நிறுவியிருக்கிறது. நல்ல தரமான விதைகளை அந்தக் குழு தேர்ந்தெடுக்கிறது. அதை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும். உரிய பலன் தரத்தக்க

முறையில், விதையின் சத்துப்பொருள் கெடாத முறையில் பாதுகாக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. உரிய விளைச்சலைத் தரத்தக்க அளவில் விதைகளைப் பாதுகாத்து வைக்கத்தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

சிறப்பு அங்காடிகள்

* 283 வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையில் சூப்பர் மார்க்கெட்டுகள் எத்தனை உள்ளன ?

(இ) அவைகளில் எத்தனை தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பணியாளர்கள் உள்ளனர் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) கோவையில் "சிந்தாமணி" என்ற பெயரில் "கூட்டுறவு சிறப்பு அங்காடி" ஒன்று இயங்கி வருகிறது.

(இ) அதில் 6 தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த பணியாளர்கள் உள்ளனர்.

* 284 வினா—திரு. கரு. சிமைச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் சிறப்பு அங்காடி ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சூப்பர் மார்க்கெட்டில் 6 தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பணியாற்றுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆறு பேர்கள் என்னென்ன வேலைகளில் இருக்கிறார்கள் ? கிளெரிகல் செக்ஷனிலா அல்லது சுத்தப்படுத்துகின்ற பணியில் ஈடுபட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, என்னென்ன வேலைகளில் அவர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் இப்போது என் கைவசம் இல்லை.

திரு. ஏ. அ. சுப்பராஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இராமநாதபுரம் மாவட்டத்திலே சூப்பர் மார்க்கெட்டே இல்லை. அங்கே சிவகாசி, விருதுநகர், ராஜபாளையம் இந்த நகரங்களின் ஜனத்தொகையைக் கணக்கில் கொண்டு சூப்பர் மார்க்கெட் ஒன்றை ஆரம்பிக்க ஏதாவது செயல்திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பு அங்காடி மத்திய அரசின் உதவியில் நடைபெறுகிறது. மத்திய அரசு ஒரு திட்டத்தின் அடிப்படையில் சிறப்பு அங்காடிகளுக்கு நிதி உதவுகிறது. எந்த நகரங்களில் ஒன்றரை